


தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (27.1.2026) சென்னையில் நடைபெற்ற திருவள்ளூர் மத்திய மாவட்ட கழக துணைச் செயலாளர் திருமதி காயத்ரி ஸ்ரீதர் மற்றும் திருவள்ளூர் மத்திய மாவட்ட விவசாய அணித் தலைவர் ஸ்ரீதர் தம்பதியரின் மகள் ஸ்ரீசாத்விகா – சாகித்யன் ஆகியோரது திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு, மரக்கன்று பசுமைக்கூடை வழங்கி மணமக்களை வாழ்த்தினார். உடன் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் எஸ்.எம்.நாசர், சட்டமன்ற உறுப்பினர் கிருஷ்ணசாமி, தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் தலைவர் துறைமுகம் காஜா, தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் தலைவர் பூச்சி முருகன், கழக இணை அமைப்புச் செயலாளர் அன்பகம் கலை மற்றும் மணமக்களின் குடும்பத்தினர் உள்ளனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (27.1.2026) சென்னையில் நடைபெற்ற கலைமாமணி தெய்வத்திரு வழுவூர் மாணிக்க விநாயகம் அவர்களின் பேரனும், செந்தில்குமார் அவர்களின் மகனுமான சுதர்ஷன் – தில்பர் ஆகியோரது திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு, மரக்கன்று பசுமைக்கூடை வழங்கி மணமக்களை வாழ்த்தினார். உடன் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், சட்டமன்ற உறுப்பினர் அரவிந்த் ரமேஷ் மற்றும் மணமக்களின் குடும்பத்தினர் உள்ளனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று (27.1.2026) முகாம் அலுவலகத்தில், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் மு.வீரபாண்டியன், முன்னாள் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன், நாடாளுமன்ற உறுப்பினர் கே.சுப்பராயன், மாநில துணைச் செயலாளர் எம்.ரவி ஆகியோர் சந்தித்து, 1.2.2026 அன்று சென்னை வள்ளுவர் கோட்டத்தில் நடைபெறவுள்ள இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் நூற்றாண்டு நிறைவு விழாவிற்கான அழைப்பிதழை வழங்கினார்கள்.



முதலமைச்சர் அவர்கள், வருகின்ற 29.01.2026 அன்று பிராட்வே பேருந்து நிலையத்தில் பல்நோக்கு ஒருங்கிணைந்த போக்குவரத்து பேருந்து முனையம் அமைக்கும் பணிக்கு அடிக்கல் நாட்டப்படவுள்ளதை முன்னிட்டு மேற்கொள்ளப்படும் முன்னேற்பாடுப் பணிகளை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, நேற்று (27.01.2026) நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். இந்த ஆய்வின்போது மேயர் திருமதி ஆர்.பிரியா, மாநகராட்சி ஆணையாளர் ஜெ.குமரகுருபரன், வடக்கு வட்டார துணை ஆணையாளர் கட்டா ரவி தேஜா, மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## ‘தமிழ்நாடு என்றால், மகளிர் நாடு’ எனும் அளவுக்கு ஏராளமான திட்டங்கள்

# இந்தியாவிலேயே முதல் முறையாக உலக வங்கி நிதி வழங்குகிறது : ஒரு மாநில அரசின் பெண்கள் மேம்பாட்டுத் திட்டங்களுக்கு நிதி உதவி !

### சென்னையில் நடைபெறும் சர்வதேச மகளிர் உச்சி மாநாட்டில்

## துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பேச்சு!




***சென்னை,ஜன.28-***

**சென்னை, நந்தம்பாக்கம், வர்த்தக மையத்தில் நடைபெற்று வரும் சர்வதேச மகளிர் உச்சி மாநாட்டில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வரவேற்புரையாற்றினார்.**

**முன்னதாக, மகளிருக்கான பிங்க் பஸ் (Pink Bus), மகளிர் காவலர்களுக்கான வாகனங்கள், பிங்க் ஆட்டோ (Pink Auto) ஆகியவற்றின் பயன்பாட்டை தொடங்கி வைத்து, மகளிர் சுய உதவிக் குழுவினரால் தயாரிக்கப்பட்ட பொருட்கள் இடம்பெற்று இருந்த அரங்குகளைப் பார்வையிட்டார்கள்.**

**இதைத் தொடர்ந்து துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆற்றிய வரவேற்புரையில் அவர், ``இந்தியாவிலேயே முதல் முறையாக உலக வங்கி ஒரு மாநில அரசின் திட்டத்துக்கு, அனைத்து வயது பெண்களின் மேம்பாட்டையும் கருத்தில் கொண்டு நிதி உதவி அளிக்க முன்வந்துள்ளது. தமிழ்நாடு என்றால் மகளிர் நாடு என்று சொல்கிற அளவுக்கு ஏகப்பட்ட திட்டங்களை நம்முடைய முதலமைச்சர் அவர்கள் செயல்படுத்தியிருக்கிறார்கள்” என்று குறிப்பிட்டார்.**

**துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆற்றிய வரவேற்புரை வருமாறு:**

முதலமைச்சர் அவர்களுக்கு முதற்கண் எங்களின் வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம். தமிழ்நாடு மகளிரின் வளர்ச்சியை அடுத்த கட்டத்திற்கு உறுதி செய்ய, ரூபாய் 5,000 கோடி மதிப்பிலான தமிழ்நாடு வி-சேஃப் (TN V-SAFE) திட்டத்தை, இன்றைய தினம் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் துவக்கி வைக்கிறார்கள்.

**உற்சாகமும் மகிழ்ச்சியும்**

அதுமட்டுமல்ல, `ஷீ லீட்ஸ்’ (She Leads) என்ற தலைப்பில், சர்வதேச மாநாடும் இன்றிலிருந்து துவங்க இருக்கிறது. இங்கே ஆயிரக்கணக்கான மாணவிகள், தாய்மார்கள், மகளிர் வருகை தந்திருக்கிறீர்கள். உங்களின் இந்த உற்சாகமும் மகிழ்ச்சியும் எப்போதும் தொடர வேண்டும். அதற்குத்தான் நம்முடைய திராவிட மாடல் அரசு பல்வேறு முன்னெடுப்புகளைத் தொடர்ந்து எடுத்து வருகிறது. அதில் முக்கியமான ஒரு முன்னெடுப்புதான் இந்த தமிழ்நாடு வி-சேஃப் திட்டம்.

நாட்டிலேயே பெண்களுக்கு பாதுகாப்பான நகரமாக, சென்னையை பல்வேறு ஆய்வுகள் சுட்டிக்காட்டி இருக்கின்றன. இந்தச் சாதனையை அடித்தளமாக கொண்டு நம்முடைய திராவிட மாடல் அரசு இன்றைக்கு தமிழ்நாடு வி-சேஃப் (TN V-SAFE) திட்டத்தை அறிமுகப் படுத்துகிறது. இந்தத் திட்டம் மூலம், பெண்களின் பாதுகாப்பு, வளர்ச்சி, அவர்களின் ஒட்டுமொத்த நலனும் மேம்படவிருக்கிறது.

நம் தமிழ்நாடு அரசு மகளிர் முன்னேற்றத்திற்காகச் செயல்படுத்துகின்ற திட்டங்களைப் பார்த்து உலக வங்கி இன்றைக்கு இந்தத் திட்டத்தைச் செயல்படுத்த சுமார் 1,250 கோடி ரூபாய் கடனை, உதவியாகத் தருகிறார்கள்.

**பெண்களின் மேம்பாடு**

இந்தியாவிலேயே முதல் முறையாக உலக வங்கி ஒரு மாநில அரசின் திட்டத்துக்கு, அனைத்து வயது பெண்களின் மேம்பாட்டையும் கருத்தில் கொண்டு நிதி உதவி அளிக்க முன்வந்துள்ளார்கள். தமிழ்நாடு அரசு சார்பாகவும், இங்கு வந்துள்ள பெண்கள் சார்பாகவும், உலக வங்கிக்கு என் நன்றியை தெரிவித்து கொள்கிறேன்.

பிறக்கும் பெண் குழந்தைகள் தொடங்கி, பள்ளி, கல்லூரி செல்லும் மாணவிகள், பணிக்குச் செல்கின்ற மகளிர், இல்லத்தரசிகள், வயதான பெண்மணிகள் என அனைத்துத் தரப்பு மகளிருடைய பாதுகாப்பையும் வளர்ச்சியையும் உறுதி செய்கின்ற வகையில், இந்த வி-சேஃப் திட்டம் தொடங்கப்பட்டிருக்கிறது. ஏற்கனவே தமிழ்நாடு என்றால் மகளிர் நாடு என்று சொல்கிற அளவுக்கு ஏகப்பட்ட திட்டங்களை நம்முடைய முதலமைச்சர் அவர்கள் செயல்படுத்தியிருக்கிறார்கள்.

பெண்களுடைய சுமையைக் குறைக்கின்ற வகையில், கொண்டு வரப்பட்ட திட்டம்தான் பள்ளி குழந்தைகளுக்கான முதலமைச்சர் காலை உணவுத் திட்டம்.

**புதுமைப் பெண் திட்டம்**

பெண்கள் உயர்கல்வியில் சேருகின்ற விகிதத்தை அதிகரிக்க முதலமைச்சர் கொண்டு வந்த திட்டம் புதுமைப் பெண் திட்டம்.

வேலைக்குச் செல்லும் பெண்களுக்கு உதவுகின்ற வகையில், முதலமைச்சர் கொண்டு வந்த திட்டம் விடியல் பயணத் திட்டம்.

கல்லூரியில் படிக்கின்ற பெண்களுக்கு வேலைவாய்ப்பை ஏற்படுத்தித் தருகின்ற திட்டம் நான் முதல்வன் திட்டம்.

வேலைக்காக கிராமங்களில் இருந்து நகரங்களுக்கு வரும் மகளிர் பாதுகாப்பாகத் தங்கக் கொண்டு வரப்பட்ட திட்டம்தான் தோழி திட்டம்.

**கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம்**

வீட்டில் காலையிலிருந்து இரவு வரை 24 மணி நேரம் உழைக்கின்ற தாய்மார்களின் உழைப்பை யாரும் பொருட்படுத்தவே இல்லை. முதன்முதலாக அங்கீகரித்தது, நம்முடைய முதலமைச்சர் அவர்கள்தான். அதற்காக அவர் கொண்டு வந்த திட்டம்தான் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம். இந்தத் திட்டத்துக்கு முதலமைச்சர் அவர்கள் தான் பெயர் வைத்தார். மாதம் 1,000 ரூபாய் என்பது ஏதோ சலுகைத் தொகை கிடையாது. அது பெண்களுடைய உழைப்பை அங்கீகரிக்கின்ற உரிமைத் தொகை.

இதுமாதிரியான திட்டங்களால் தமிழ்நாட்டின் திராவிட மாடல் அரசு இன்றைக்கு இந்தியாவுக்கு முன்மாதிரி அரசாக திகழ்ந்துகொண்டு வருகிறது. வருக வருக!

இந்தச் சிறப்புக்குரிய மகளிர் மாநாட்டில் பங்கேற்றுள்ள மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும், அமைச்சர்கள் தா.மோ.அன்பரசன், கீதா ஜீவன், மா.சுப்பிரமணியன் அவர்களையும் வருக வருக என வரவேற்கிறேன்.

மாண்புமிகு மேயர், துணை மேயர், மாண்புமிகு நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களையும், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகளையும் வரவேற்கிறேன்.

தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலாளர் முருகானந்தம் ஐ.ஏ.எஸ்., அவர்களையும், அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் பிரதீப் யாதவ் ஐ.ஏ.எஸ்., அவர்களையும், செந்தில்குமார் ஐ.ஏ.எஸ்., அவர்களையும், அரசு முதன்மைச் செயலாளர் ஜெயஸ்ரீ முரளிதரன் ஐ.ஏ.எஸ்., அவர்களையும், தமிழ்நாடு வி-சேஃப் திட்ட இயக்குனர் ஆஷா அஜித் ஐ.ஏ.எஸ்., அவர்களையும், வந்திருக்கக்கூடிய அனைத்து அரசு அதிகாரிகளையும், சிறப்பு விருந்தினர்களாக வருகை தந்துள்ள டாபே (TAFE) மேலாண்மை இயக்குநர் மல்லிகா சீனிவாசன் அவர்களையும் வரவேற்று மகிழ்கிறேன்.

உலக வங்கியின் பிராந்திய இயக்குநர் செம் மெட்டே, பல்வேறு தூதரகங்களின் பிரதிநிதிகள், ஐக்கிய நாடுகளின் பிரதிநிதிகள், மொரிஷியஸின் முன்னாள் தலைமைக் கொறடா நவீன ராம்யான், சி.ஐ.ஐ. (CII) தமிழ்நாட்டின் தலைவர் உன்னிகிருஷ்ணன், மாநில மகளிர் உரிமைகள் ஆணையத்தின் தலைவர் குமாரி விஜயகுமார் அவர்களையும், பல்வேறு நிறுவனங்களைச் சேர்ந்த அதிகாரிகள், பெண்களின் முன்னேற்றத்திற்காக, உரிமைகளுக்காகப் பாடுபடும் செயல்பாட்டாளர்கள் அனைவரையும் வரவேற்று மகிழ்கிறேன்.

அனைத்திற்கும் மேலாக நிகழ்ச்சியில் பார்வையாளர்களாகக் கலந்து கொண்டிருக்கக்கூடிய எஸ்.ஹெச்.ஜி (SHG) சகோதரிகள் உங்கள் அனைவரையும், மாணவ மாணவியர்கள் அனைவரையும், பத்திரிகை நண்பர்களையும் வருக வருக என வரவேற்று விடைபெறுகிறேன்.

இவ்வாறு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வரவேற்புரையாற்றினார்.